[4th September 1959

MR. SPEAKER : தயவு செய்து கனம் அங்கத்தினர் கேள்வியாகக் கேட்க வேண்டும். அவருடைய அபிப்பிராயத்தைச் சொல்லக் கூடாது. அபிப்பிராயம் சொல்ல வேண்டுமானால் ஒரு தீர்மானமாகக் கொண்டு வந்து அதன் மூலம்தான் சொல்ல வேண்டும். கேள்வி நேரத்தில் கேள்வியாகத்தான் கேட்க வேண்டும். கேள்வி கேட்டால்தான் பதில் சொல்ல முடியும்.

SRI V. K. KOTHANDARAMAN : அந்தப் பழக்கத்தைத் திடீரென்று மாற்றுவதற்குக் காரணம் என்ன? அவர்கள் தங்களுடைய சொந்தச் செலவிலேயே வந்து கூட்டங்களில் கலந்துகொள்கிறோம் என்று சொன்னால் ஏன் அதை அனுமதிக்க முடியாது? எதற்காக அவர்களைக் கண்டு பயப்பட வேண்டும்? அந்தக் கூட்டங்களுக்கு எல்லோரையும் அழைப்பதற்கு என்ன?

THE HON. SRI P. KAKKAN : சர்க்கார் பயப்படுவது இல்லை. எல்லா அங்கத்தினர்களும் தங்களுடைய அபிப்பிராயத்தைச் சட்டமன்றத்தில் அல்லது கலெக்டரிடத்தில் சொல்லலாம்.

Lorry Traffic

* 128 Q.—SRI P. G. MANICKAM : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

இரவு 12 மணி முதல் அதிகாலை 4 மணி வரை எந்த ரோட்டிலும், லாரி ஓட்டக் கூடாது என்று அரசாங்கத்தாரால் தடையுத்தரவு பிறப்பிக்கப் பட்டதை மீறியதற்காக எத்தனை கேஸ்கள் விசாரணைக்குக் கொண்டுவரப் பட்டன?

THE HON SRI V. RAMAIAH : **991 (Nine hundred and ninety-one) cases have been charged for violation.**

SRI P. G. MANICKAM : தற்போது அந்தச் சட்டமானது அமுலில் இருக்கிறதா? அவ்வாறு இல்லாவிட்டால் அந்தச் சட்டத்தை எடுக்கப் பட்டதற்குக் காரணம் என்ன?

THE HON. SRI V. RAMAIAH : அந்த உத்தரவு அமுலில் இல்லை. முன்பு இருந்த உத்தரவை திரும்பப் பெற்றுவிட்டோம். அதற்குக் காரணம் போக்கு வரத்தை நல்ல திறமையாக நடத்துவதற்கு அதில் சிலருக்கு கொஞ்சம் கஷ்டமும் சிரமும் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். அந்தத் தொழில் சம்பந்தப்பட்ட வர்த்தகர்கள், காய்கறி வியாபாரிகள், நியூஸ் பேப்பர்கள் நடத்தக் கூடிய ஸ்தாபனங்கள் அவர்களெல்லாம் இதில் பல சிக்கல்கள் இருக்கின்றன அதை எடுத்துவிட வேண்டும் என்று சொன்னதால் அதை எடுத்துவிட்டோம். அதன் பிறகுதான் அந்த உத்தரவு அமுலில் இருக்க வேண்டாம் என்று முடிவு செய்யப்பட்டது.

SRI S. LAZAR : அந்த உத்தரவு அமுலில் இருந்த வரைக்கும் ஆக்ஸிடெண்டுகள் அதாவது கேஸ் குறைவாக இருந்ததா அல்லது அதிகமாக இருந்ததா?

THE HON. SRI V. RAMAIAH : இதற்குத் தனி கேள்வி போட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI T. S. RAMASWAMY : May I know, Sir, what has happened to these cases against lorries? Were they withdrawn or are they still pending in courts?

THE HON. SRI V. RAMAIAH : Sir, all the cases have not been withdrawn. Some have been disposed of. There are still about 354 cases pending trial.